
பக்கங்கள் 18+6

மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | ஆவணி 11 செவ்வாய்க்கிழமை 27.08.2024 | அதிர்வு 26

## பௌசிக்கு 2 வருடங்கள் சிறை 10 வருடங்களுக்கு ஒத்திவைப்பு



வாகனமொன்றை முறையற்ற விதத்தில் பயன்படுத்திய குற்றத்தை ஒப்புக் கொண்டதற்கமைய முன்னாள் அமைச்சரும்

04

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்




# தமிழரின் பலத்தைக் காட்டவே ஜனாதிபதித் தேர்தலில் போட்டி

## இப்படிக் கூறுகின்றார் தமிழ்ப் பொது வேட்பாளர் அரியம்

(எஸ்.நிதர்ஷன்)

“தமிழ் மக்களின் ஒற்றுமையை வெளியுலகத்துக்குக் காண்பிப்பதற்காகவே ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளராகப் போட்டியிடுகின்றேன். இன்றும் எமது நிலங்கள் அபகரிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்ற நிலையில்தான் நாம் இந்த ஜனாதிபதித் தேர்தலைச் சந்திக்கின்றோம்.”

- இவ்வாறு தமிழ்ப் பொது வேட்பாளர் பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

04

# கிளிநொச்சியில் கோர விபத்து! குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழப்பு!!

கிளிநொச்சியில் இடம்பெற்ற கோர விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் – ஏ 9 வீதியில் கிளிநொச்சி, 155ஆம் கட்டையில் இன்று காலை 8 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதன்போது கனகாம்பிகைக்குளம் பகுதியைச் சேர்ந்த அருள்நேசன் அருள்வதனன் என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்துள்ளார்.

04



உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்-Bonding Tamils Globally



# நல்லூரில் தியாக தீபம் திலீபனுக்கு தமிழ்ப் பொது வேட்பாளர் அஞ்சலி!

(எஸ்.நிதர்ஷன்)

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பின் சார்பில் போட்டியிடும் தமிழ்ப் பொது வேட்பாளர் பா.அரியநேத்திரன் தியாக தீபம் திலீபனுக்கு அஞ்சலி செலுத்தியுள்ளார்.

பொலிகண்டியில் இருந்து பொத்துவில் வரையாக தமிழ்ப் பொது வேட்பாளரால் ஆரம்பிக்கப்பட்டுள்ள தேர்தல் பிரச்சாரப் பயணத்தின் ஒரு கட்டமாக இன்று இந்த அஞ்சலி செலுத்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் – நல்லூரில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபனின் நினைவுத்தூபியில் இருக்கும் திலீபனின் திருவுருவப் படத்துக்கு அரியநேத்திரன் மலர் மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்தியுள்ளார்.

இந்த நிகழ்வில் தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகள் மற்றும் சிவில் சமூகங்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தி பிரச்சாரப் பயணத்தை அங்கிருந்து தொடர்ந்து ஆரம்பித்தனர்.














# தலைமன்னார் கடற்பரப்பில் கைதான எட்டு இந்திய மீனவர்களுக்கும் மறியல்

(எஸ்.ஆர்.லெம்பேட்)

இலங்கைக் கடற்பரப்பினுள் சட்ட விரோதமாக நுழைந்து மீன்பிடித்த நிலையில் தலைமன்னாரில் கைது செய்யப்பட்ட தமிழகம், இராமேஸ்வரத்தைச் சேர்ந்த 8 மீனவர்களையும் எதிர்வரும் 5 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் நீதிவான் நீதிமன்றம் இன்று உத்தரவிட்டது.

இலங்கைக் கடற்பரப்பினுள் நேற்று இரவு சட்டவிரோதமாக ஒரு விசைப் படகில் நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட நிலையில் மேற்படி 8 மீனவர்களையும் கடல் ரோந்துப் பணியில் ஈடுபட்ட கடற்படையினர் கைது செய்து தலைமன்னார் கடற்படையிடரிடம் ஒப்படைத்தனர்.

தலைமன்னார் கடற்படையினர், அந்த மீனவர்களிடம் முன்னெடுத்த விசாரணைகளைத் தொடர்ந்து இன்று பகல் மேலதிக நடவடிக்கைகளுக்காக மன்னார் மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறை அதிகாரிகளிடம் அவர்களை ஒப்படைத்தனர்.

கடற்றொழில் திணைக்கள அதிகாரிகள் மேலதிக விசாரணைகளின் பின்னர் இன்று மதியம் மன்னார் நீதிமன்றத்தில் அவர்களை ஆஜர்படுத்தினர்.

இதன்போது விசாரணைகளை முன்னெடுத்த மன்னார் நீதிவான் மேற்படி 8 மீனவர்களையும் எதிர்வரும் 5 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.







# 4 இந்திய மீனவர்களுடன் நடுக்கடலில் மூழ்கிய படகு

## இருவர் உயிருடன் மீட்பு; இருவர் மாயம்




(ந.லோகதயாளன்)

மீன்பிடிப் படகு உடைந்து கடலில் மூழ்கியதனால் கடலில் வீழ்ந்த இரண்டு இந்திய மீனவர்கள் நீந்தி கச்சதீவுக் கரையை அடைந்தபோது கடற்படையினரால் மீட்கப்பட்டனர். அதேவேளை, இரண்டு இந்திய மீனவர்கள் காணாமல்போயுள்ளனர்.

தமிழகத்தின் இராமேஸ்வரத்தில் இருந்து மீன்பிடிக்காக ரோலர் விசைப் படகில் நான்கு மீனவர்கள் பயணித்த போது இந்திய எல்லைக்குள் கச்சதீவுக்கு அண்மையாக படகு உடைந்து கடலில் மூழ்கியுள்ளது.

மூழ்கிய இந்தியப் படகில் இருந்த இரண்டு மீனவர்களே கச்சதீவை அடைந்தபோது இருவரும் இலங்கைக் கடற்படையினரால் காப்பாற்றப்பட்டு யாழ்ப்பாணத்துக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர்.

இதேநேரம் படகில் இருந்து காணாமல்போன இரண்டு இந்தியமீனவர்களையும் இலங்கை, இந்தியக் கடற்படையினர் தேடி வருகின்றனர்.

# ரயில் மோதி குடும்பஸ்தர் மரணம்!

ரயில் மோதி குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

களுத்துறை வடக்கு, பொலிஸ் பிரிவுக் குட்பட்டவஸ்கடுவபகுதியில்நேற்றுமாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மஹவயிலிருந்து பெலியத்த நோக்கிப் பயணித்த ரயில் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது என்று களுத்துறை வடக்கு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வஸ்கடுவ பிரதேசத்தைச் சேர்ந்த 39 வயதுடைய நபரே இதன்போது உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை களுத்துறை வடக்கு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**பௌசிக்கு...**

நாடாளுமன்ற உறுப்பினருமான ஏ.எச்.எம். பௌசிக்கு 2 வருட கடூழியச் சிறைத் தண்டனை விதித்து கொழும்பு மேல் நீதிமன்றம் இன்று உத்தரவிட்டுள்ளது.

அதனை 10 வருடங்களுக்கு ஒத்தி வைத்து நீதிபதி நவரத்ன மாரசிங்க உத்தரவிட்டார்.

அத்துடன், பிரதிவாதிக்கு 4 இலட்சம் ரூபா அபராதமும் விதித்து நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

நெதர்லாந்து அரசால் இடர் முகாமைத்துவ நிலையத்துக்கு நன்கொடையாக வழங்கப்பட்ட ஜீப்பை தமது தனிப்பட்ட தேவைக்காகப் பயன்படுத்தியமை, வாகனத்தின் பராமரிப்புப் பணிகளுக்காக 10 இலட்சம் ரூபா அளவிலான தொகையை அமைச்சின் நிதியில் இருந்து செலவிட்டமை உள்ளிட்ட 4 குற்றச்சாட்டுகளின் கீழ் முன்னாள் அமைச்சரான ஏ.எச்.எம் பௌஸிக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் தீர்ப்பை அறிவித்து நீதிபதி இந்தத் தண்டனையை விதித்துள்ளார்.

இந்த வழக்கை இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழு தாக்கல் செய்திருந்தது.

**கிளிநொச்சியில்...**

ஆட்களை ஏற்றுவதற்காக 155 ஆம் கட்டை சந்தியில் குறுந்தூர பஸ் தரிப்பிடத்தில் நிறுத்தப்பட்ட பஸ்ஸை மோட்டார் சைக்கிளில் வந்தவர் முந்திச் செல்ல முற்பட்ட வேளை, அதே திசையில் வந்த பாரவூர்தி மோட்டார் சைக்கிளை மோதித் தள்ளியதில் விபத்து இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளில் பயணித்த நபரே உயிரிழந்துள்ளார்.

பாரவூர்தியின் சாரதி கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் சரணடைந்தமையையடுத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளைக் கிளிநொச்சி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

**தமிழரின் பலத்தைக் காட்டவே...**

யாழ்ப்பாணம், நல்லூரில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபனின் நினைவிடத்தில் அஞ்சலி செலுத்திய பின் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தியாகி திலீபன் எதற்காக உண்ணாவிரதம் இருந்து தனது உயிரை அர்ப்பணித்தாரோ அத்தகைய தேவை இன்னும் இருந்துகொண்டு இருக்கின்றது. எமக்கான தீர்வு கிடைத்தபாடில்லை.

அந்தத் தீர்வை நோக்கிய பயணமாக தமிழ் மக்களின் ஒற்றுமைக்காக ஜனாதிபதி வேட்பாளராகத் தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பின் சார்பில் பொது வேட்பாளராகப் போட்டியிடுகின்றேன்.

ஜனாதிபதியாக வருவதல்ல எனது நோக்கம். இந்தத் தேர்தல் மூலம் எமக்கான தீர்வைப் பொற்றுக்கொள்ளத் தமிழர்களாகிய நாம் ஒற்றுமையா இருக்கின்றோம் என்பதைக் காண்பிப்பதற்காகப் போட்டியிடுகின்றேன்.

எமது மக்கள் நேர காலத்துடன் பெருவாரியாகச் சென்று வாக்களிப்பதன் ஊடாக எமது அடுத்த கட்டத்தை நோக்கிப் பயணிக்க முடியும்.

தற்போது ஒரு சிலரின் தேர்தல் விஞ்ஞாபனம் வெளியாகிக் கொண்டிருக்கின்றது. அவற்றை அவதானித்தால் தமிழர் பற்றியோ, அவர்களுக்கான இனப்பிரச்சினை தீர்வு பற்றியோ எதுவும் இல்லை.

அபிவிருத்தி, ஒரே நாட்டுக்குள் தீர்வு, சமத்துவம் என்று கூறுகின்றார்கள். சமத்துவம் என்றால் என்ன? இந்த நாட்டில் தமிழன் ஜனாதிபதியாக வர முடியுமா? இதுதான் இந்த நாட்டின் சமத்துவமாகும்.

இதனைப் புரிந்துகொள்ள வேண்டும். அதற்காக நான் ஜனாதிபதியாக வருவது நோக்கமல்ல. ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டு தமிழர்களின் ஒற்றுமையின் பலத்தைக் காண்பிப்பதே நோக்கமாகும். ஒற்றுமையின் பலம் தமிழ் மக்களை அடுத்த கட்ட நகர்வுக்கு எடுத்துச் செல்லும்."
– என்றார்.






# ஆஸியில் அகதிகள் விடுதலைக்காக நடக்கும் சைக்கிள் ஓட்டப் போராட்டம்!

## ஒக்ரோபர் 2 ஆம் திகதி தொடக்கம் 18 ஆம் திகதி வரை

ஆஸ்திரேலியாவில் நிரந்தர வதிவிட உரிமை வழங்கக் கோரி பதின்னான்கு வருடங்களாக காத்திருக்கும் அகதிகள் விடுதலைக்காக தொடர் சைக்கிள் ஓட்டப் போராட்டம் நடைபெற்று வருகிறது.

இந்த வருடமும் இந்தப் போராட்டத்தை நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஒக்ரோபர் 2 ஆம் திகதி தொடக்கம் 18 ஆம் திகதி வரை போராட்டம் இடம்பெ பறவுள்ளது.

இறுதிப் போர் 2009 ஆம் ஆண்டுகளின் பின்னர் தமது சொந்த மண்ணில் வாழ நிர்க்கதியற்று ஆஸ்திரேலியாவுக்குப் புலம்பெயர்ந்துள்ள தமிழ் அகதிகள் கடந்த 12-14 வருடங்களாக நிரந்தர வதிவிட உரிமை வழங்கப்படாது தொடர்ந்தும் அந்த நாட்டு அரசால் தாம் வஞ்சிக்கப்படுகின்றனர் என்று கூறுகிறார்கள்.

இவர்களின் விடுதலைக்காகத் தொடர் சைக்கிள் ஓட்டப் போராட்டம் நடைபெற்று வருகின்றது. பிரிஸ்பேர்ன் மாநகரில் இருந்து கன்பரா நோக்கி 1400 கிலோ மீற்றர் தூரத்தை 18 நாள்களாக தினுஷன் சந்திரசேகரம் எனும் தமிழ் இளைஞன் கடந்த வருடம்





சைக்கிள் ஓடிக் கடந்துள்ளார்.

தமிழ் அகதிகள் தமது சொந்த நாட்டுக்கு மீளத் திரும்ப முடியாத உயிர்ப் பாதுகாப்பின்மை ஒருபுறம் புகலிடக் கோரிக்கைகள் மறுக்கப்பட்டு நிரந்தர வதிவிட உரிமையற்ற அங்கலாய்ப்பும் தமது குடும்ப உறுப்பினர்களோடு சேர்ந்து வாழ முடியாத கையறு நிலையுமாக தொடர்ச்சியான உளச்சிதைவுகளால் இவர்கள் துவண்டு போயிருக்கின்றனர்.

போராட்டமே வாழ்வாகிப் போன தாம் வேறு வழிகளின்றியே இந்த அமைதி வழியிலான போராட்டத்தை முன்னெடுத்து வருவதாகவும், தமக்கு நிரந்தர விசா வழங்கப்படும் வரையிலும் தாம் தமது போராட்டத்தைக் கைவிட்டுப் போவதில்லை எனவும் போராட்டத்தில் ஈடுபடுபவர்கள் கூறுகின்றார்கள்.

எனவே இப்போராட்டம் வெற்றியளித்து தமக்குரிய வாழ்வுரிமை கிடைப்பதற்காக ஆஸ்திரேலியா உள்ள அனைவரதும் ஒத்துழைப்பையும் வேண்டுவதோடு தமது போராட்டக்களத்திற்கு அனைவரையும் அணிதிரண்டு வந்து உறுதுணையாக நிற்குமாறும் வேண்டுகோள் ஒன்றிறையும் முன்வைத்துள்ளனர்.



# பொதுஜன பெரமுன எம்.பி. ரணிலை ஆதரிக்க முடிவு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

திகாமடுல்ல மாவட்ட பொதுஜன பெரமுன நாடாளுமன்ற உறுப்பினர் விமலவீர திசாநாயக்க ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்க முடிவு செய்துள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் அமைச்சருமான விமலவீர திசாநாயக்க நடைபெறவுள்ள ஜனாதிபதியாக தேர்தலில் சுயேட்சை வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிப்பதாக அறிவித்துள்ளார்.கொழும்பு பிளவர் வீதியிலுள்ள தேர்தல் அலுவலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க லைச்சந்தித்து தனது நிலைப்பாட்டைத் தெரிவித்துள்ளார்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# மத மேலாதிக்கத்தை ஏற்கிறோமா?

இலங்கையில் கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கு மேல் சர்ச்சையை ஏற்படுத்தி வரும் ஓர் அரசமைப்புச் சரத்துக் குறித்து தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுர குமார திஸநாயக்க கருத்து வெளியிட்டிருக்கின்றார்.

இலங்கைக் குடியரசில் பௌத்த மதத்திற்கு முன்னுரிமை வழங்குவதாக அரசமைப்புச் சட்டம் வழங்கியுள்ள உத்தரவாதத்தை நீக்குமாறு நாட்டில் வாழும் சிங்களம் அல்லாத மக்களின் பிரதிநிதிகள் கோரவில்லை என அவர் சுட்டிக் காட்டியிருக்கின்றார்.

தேசிய மக்கள் சக்தியின் அரசாங்கத்தின் கீழ் பௌத்த மதத்திற்கு முன்னுரிமை வழங்கப்படமாட்டாது என முன்னெடுக்கப்படும் பிரச்சாரத்திற்குப் பதிலளிக்கும் வகையில், அண்மையில் நடைபெற்ற மகாசங்க மாநாட்டில் உரையாற்றிய அநுர குமார திஸாநாயக்க இவ்வாறு தெரிவித்திருக்கின்றார்.

தற்போதைய ஜனாதிபதி ரணில், 2015 இல் பிரதமராக பதவி வகித்த நல்லாட்சி அரசாங்கத்தில், அவர் தலைமையில் இடம்பெற்ற புதிய அரசமைப்பை தயாரிப்பது தொடர்பான கலந்துரையாடலின் போது அவ்வாறான கோரிக்கை எதுவும் முன்வைக்கப்படவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் அரசமைப்பின் 9 ஆவது சரத்து, "இலங்கைக் குடியரசு பௌத்த மதத்திற்கு முன்னுரிமை அளிக்கும்" எனக் கூறுகிறது.

2015-19ஆம் ஆண்டில், புதிய அரசமைப்பை உருவாக்குவதற்கான நடவடிக்கைகள் இடம்பெற்றன. அது தொடர்பாக நடைபெற்ற வழிகாட்டல் குழுவின் கூட்டங்களுக்கு அப்போதைய பிரதமரான தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே தலைமை தாங்கினார்.

அதில் தானும், தோழர் பிமல் ரத்நாயக்கவும், சம்பந்தன், சுமந்திரன், ஹக்கீம், மனோ கணேசன் போன்றோரும் பங்குபற்றினர் என்று கூறிய அநுர குமார திஸநாயக்க அவர்களில் யாரும் அரசமைப்பின் 9 ஆவது பிரிவைத் திருத்த முன்மொழியவில்லை, அதாவது 9 ஆவது பிரிவை அவ்வாறே பாதுகாத்துத்தான் புதிய அரசமைப்பு வரைவு செய்யப்பட்டது என்றும் குறிப்பிட்டிருக்கின்றார்.

உண்மைதான். ஆயினும் அதன் பின்னணியை - தமிழ்த் தலைமையின் அந்த நடத்தையுள் புதைந்து கிடந்த நிலைப்பாட்டை - அநுர குமார உட்பட்ட தென்னிலங்கைச் சிங்களம் புரிந்து கொள்ள வேண்டும்.

இலங்கை சுதந்திரம் அடைந்த போது - வெள்ளையரின் மேற்பார்வையில் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த - அரசமைப்பில் பௌத்தத்துக்கு முன்னுரிமை கொடுக்கும் ஏற்பாடோ சரத்தோ இருக்கவில்லை. சகல மதத்திற்கும் ஒரே மாதிரியான முன்னுரிமையே வழங்கப்பட்டிருந்தது.

1972 இலும், பின்னர் அதைத் தொடர்ந்து 1978 இலும் கொண்டுவரப்பட்ட - தமிழ் மக்களின் பங்களிப்போ, இசைவோ இன்றி அவர்கள் மீதும் பேரினவாதத்தினால் பலவந்தமாக திணிக்கப்பட்ட - குடியரசு யாப்புகள் மூலமே இந்த பௌத்த மேலாதிக்க முன்னுரிமை ஏற்பாடும் திணிக்கப்பட்டது.

2015 - 2019 க்கு இடைப்பட்ட காலத்தில் புதிய அரசமைப்பு முயற்சியின் போது அந்த பௌத்த மேலாதிக்க திணிப்பை பிற மதத் தலைவர்கள் எதிர்க்கவில்லை அல்லது ஆட்சேபிக்கவில்லை என்றால் அதை - அந்தத் திணிப்பை - அவர்கள் ஏற்று அங்கீகரிக்கிறார்கள் என்று அர்த்தமல்ல. அநுர குமாரவும் அவரின் சகாக்களும் அப்படி அர்த்தம் பண்ணிக் கொள்ளக் கூடாது.

இந்த இலங்கைத் தீவின் தெற்கில் பௌத்த - சிங்களக் கலாசாரம் சரித்திர காலத்துக்கு முந்திய வேரோடல்களைக் கொண்டது. அதைத் தமிழினம் ஏற்றுக் கொள்கிறது. அதேபோல வடக்கிலும் கிழக்கிலும் தமிழர் தேசத்தின் வரலாற்று வேரோடலும் மிகத் தொன்மையானது.

சிங்கள தேசத்தில் பௌத்தத்துக்கு முன்னுரிமை கொடுப்பதை அந்தத் தேச மக்கள் விரும்புகிறார்கள். அதைத் தமிழர் தேசம் ஆட்சேபிக்காமல் இருந்தது என்றால், அதற்குக் காரணம் அந்த சமரச முயற்சியில் - புதிய அரசமைப்பை உருவாக்கும் எத்தனத்தில் - தமிழர் தேசத்தில் அவர்களின் மதங்கள், கலாசாரங்கள், மொழி, இன வழக்காறுகள், பண்பாட்டு விழுமியங்கள் போன்றவற்றுக்கு தமிழர்கள் முன்னுரிமை அளித்துச் செயல் படக் கூடிய ஏற்பாடுகளுக்கு சிங்களம் இணங்கி வரும் என்ற சமரசத் திட்டத் தில்தான்.

தமிழர் தேசத்தை அடக்கி, ஒடுக்கி அதன் மீதும் பௌத்தத்தைத் திணிக்கும் அரசமைப்பு ஏற்பாட்டை சகித்து தமிழர்கள் அதை ஏற்றுக்கொள்கின்றார்கள் என்பது இதன் அர்த்தம் அல்ல.


tamil one
SV MEDIA
SV MEDIA
FREE ENTRY ◆ FREE PARKING
MEGA BLAST
BIGGEST SUMMER EVENT
2024
CELEBRATING SOUTH ASIAN TASTE AND CULTURE
7 - 8 Sept 2024
Scarborough Fair Ground
Morningside & Finch
FOR MORE INFO
647-993-9291 | 437-872-6257
416-436-1010






# உயிரிழந்த சுகாதாரப் பரிசோதகரின் இறுதிக் கிரியைகள் இன்று!

**(எஸ். நிதர்ஷன்)**

அவித்தாவ ஒலகந்த எத்தாவெட்டுனுவல பகுதியில் நீராட சென்ற பொது சுகாதார பரிசோதகர் சிவயோகபதி கௌதமனின் பூதவுடன் இறுதிக் கிரியைகளுக்காக அச்சுவேலி பத்தமேனியிலுள்ள அவரது இல்லத்தில் வைக்கப்பட்டுள்ளது.

நீரில் மூழ்கி உயிரிழந்துள்ள குறித்த இளைஞன் மொரட்டுவ பிரதேசத்தில் பொது சுகாதார பரிசோதராகக் கடந்த ஐந்து வருடங்களாகக் கடமையாற்றியுள்ளார்.

டெங்கு ஒழிப்பு உதவியாளர்கள் குழுவினர் மற்றும் நான்கு பொது சுகாதார பரிசோதகர்கள் அடங்கிய குழுவொன்று குளத்தில் நீராடச் சென்ற போதே இந்த அனர்த்தத்தில் சிக்கினர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மொரட்டுவை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் கடமையாற்றிய எஸ். கௌதம் (வயது -26) மற்றும் எஸ். ஹர்ஷநாத் (வயது -28) ஆகிய இரு பொது சுகாதார உத்தியோகத்தர்களே இவ்வாறு உயிரிழந்தனர்.

இவர்களில் எஸ். ஹர்ஷநாத் (வயது -28) மட்டக்களப்பை சொந்த இடமாகக் கொண்டவர். இதில் எஸ்.கௌதம் அச்சுவேலி பத்தமேனியை சேர்ந்தவர்.

அச்சுவேலி இளைஞனின் பூதவுடல் இன்று தீத்தாங்குளம் இந்துமயானத்தில் நல்லடக்கம் செய்யப்படவுள்ளது.







# இளம் எழுத்தாளர்களுக்கான இலக்கிய அமர்வு மட்டுவில்

**(பழுவூரான்)**

புத்தசாசனம் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு, கலாசார அலுவல்கள் திணைக்களம், இலங்கை கலைக்கழகம், மட்டக்களப்பு மாவட்ட செயலகம் என்பன ஒன்றிணைந்து ஏற்பாடு செய்த மட்டக்களப்பு மாவட்ட இளம் எழுத்தாளர்களுக்கான இலக்கிய அமர்வு மட்டக்களப்பு மண்முனை வடக்கு பிரதேச செயலக டேபா மண்டபத்தில் நேற்று திங்கட்கிழமை (26) இடம் பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட செயலாளர் மற்றும் உதவி மாவட்ட செயலாளரின் ஆலோசனையின் பேரில், மட்டக்களப்பு மாவட்ட தமிழ் இலக்கிய துறையில் எழுத்தாளர்களின் பங்குபற்றுதல்களையும் , தேசிய ரீதியில் அவர்களின் எழுத்தாற்றல்களையும், ஊக்குவிப்பதற்கு மான செயலமர்வு இலங்கை கலைக்கழகத்தின் அனுசரணையுடன் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் ஸ்ரீ பிரசாந்தன் வளவாளராகக் கலந்து கொண்டார்.

இலங்கை கலைக்கழக உறுப்பினரும்,கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அரச இலக்கிய ஆலோசனைக் குழு உப செயலாளர் இனேஷ், மாவட்ட கலாசார உத்தியோகத்தர் எம். சீ.சீ.ஜெயினாலாப்தீன், மாவட்ட கலாசார உத்தியோகத்தர்கள் மற்றும் 14 பிரதேச செயலகங்களிலும் இருந்து தெரிவு செய்யப்பட்ட இளம் எழுத்தாளர்கள் இச் செயலமவில் பங்குபற்றியிருந்தனர்.







# உயர்தர தேசிய ஆங்கில டிப்ளோமா மாணவருக்கு ஊடகத்துறை செயலமர்வு

(றிஸ்வான் சாலிஹு)

சம்மாந்துறை உயர் தொழிநுட்ப வியல் நிறுவனத்தின் உயர் தர தேசிய ஆங்கில டிப்ளோமா முதலாம் வருட மாணவர்களுக்கு ஊடகத்துறையின் அவசியம், எமது இலக்கை வெற்றிகர மாக எப்படி மாற்றுவது போன்ற தலைப் புகளை உள்ளடக்கி இடம்பெற்றது.

உயர் தொழிநுட்பவியல் நிறுவனத் தின் பணிப்பாளர் எஸ்.எல். முஸ்தபா தலைமையில் ஆங்கிலப் பிரிவுக்கான பகுதித் தலைவர் சிரேஷ்ட விரிவுரையா ளர் எம். பி. நௌசாத்தின் ஒருங்கிணைப் பில் நேற்று திங்கட்கிழமை (26) சம்மாந் துறையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் வளவாளராக ஆர்.ஜே. மீடியாவின் பணிப்பாளரும், அறிவிப்பாளருமான ஏ.எம். இன்சாப் கலந்து கொண்டு மாணவர்கள் மத்தியில் ஊடகத்துறையின் அவசியம் பற்றி செயல்முறையோடு விளக்கினார்.

சம்மாந்துறை உயர் தொழிநுட்ப வியல் நிறுவனத்தின் விரிவுரையா ளர்கள் மற்றும் முதலாம் வருடத்தில் கல்வி கற்கும் பல மாணவர்களும் இந்தச் செயலமர்வில் கலந்து கொண் டனர்.






# ஜனாதிபதி தேர்தல் புறக்கணிப்பு பிரச்சாரத்துக்கு இடையூறு செய்த பொலிஸார் மீது முறைப்பாடு

(மன்னார் நிருபர்)

ஜனாதிபதித் தேர்தலை புறக்கணிக்க கோரி மூன்று மாதங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட மக்கள் விழிப்புணர்வு பிரச்சாரத்துக்கு பொலிஸார் இடையூறு செய்தமை தொடர்பில் தமிழ்த் தேசியக் கட்சி ஒன்று தேர்தல் ஆணையாளர் மற்றும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளது.

கிழக்கு மாகாணம் அம்பாறை மாவட்டம் திருக்கோவில் பகுதியில் கடந்த 24 ஆம் திகதி தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர், நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தலைமையிலான குழுவினர் துண்டுப் பிரசுரம் விநியோகித்து கொண்டிருந்தனர். இதன்போது வாக்களிக்க வேண்டாம் என்ற கோரிக்கை தடை செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்து பொலிஸார் தடுத்து நிறுத்தினர்.

தாம் மேற்கொள்ளவிருந்த விழிப்புணர்வு பிரசாரத்துக்கு இடையூறு விளைவித்தமை சட்டவிரோதமானது என்று குற்றம் சுமத்தும் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன், திருக்கோவில் பொலிஸ் நிலையத்துக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்து நீதி வழங்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளார்.

“வாக்களிக்க வேண்டாம் என குறிப்பிடப்பட்டுள்ளது தானே? இதனை விநியோகிக்க முடியாது, இது தடைசெய்யப்பட்டுள்ளது. ஆர்ப்பாட்டங்கள் தடைசெய்யப்பட்டுள்ளன,” எனக் கூறி நாடாளுமன்ற உறுப்பினரை பொலிஸார் தடுப்பது காணொளியில் பதிவாகியுள்ளது.

தமிழ் மக்களின் பிரதிநிதி முன்னிலையில் திருக்கோவில் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, சிங்கள மொழியில் இந்த நடவடிக்கை அரசியலமைப்புக்கு முரணானது எனவும் தெரிவித்தார்.

“இது அரசமைப்புக்கு எதிரானது, ஏனென்றால் வாக்களிக்க வேண்டாம் என மக்களுக்கு அழுத்தம் கொடுக்கப்படுவதால், அதைச் செய்ய முடியாது, உடனடியாக நிறுத்துங்கள்.”

வாக்களிக்க வேண்டாமென்ற என்ற கோரிக்கை அரசியல் யாப்பின் எந்தப் பிரிவின் கீழ் சட்டவிரோதமானது என்பதை அதிகாரி விளக்கவில்லை.

பொலிஸாரின் தலையீட்டின் மத்தியில், சமஷ்டி அரசமைப்பு ஒன்றை நிறைவேற்றுவதற்கு வேட்பாளர்கள் முன்னிற்பார்கள் எனின், பகிஷ்கரிப்புக்கு அழைப்பு விடுக்க வேண்டிய அவசியமில்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் சுட்டிக் காட்டியிருந்தார்.

“இந்த நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்வதற்கு, இந்த நாட்டின் ஒற்றையாட்சி அரசமைப்பு அகற்றப்பட்டு, சமஷ்டிஅரசமைப்புக்கொண்டுவரப்படும் என்று தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டால், நாங்கள் ஒன்றிணைந்து ஆதரவளிப்போம் எனக் கூறுகிறோம்.”

கடந்த மே மாதம் முதல், தமிழ்த் தேசிய அரசியலில் ஈடுபட்டுள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, ஒற்றையாட்சியில் நாட்டின் பெரும்பான்மையினருக்கு மாத்திரம் செயற்படும் அரச தலைவரைத் தெரிவு செய்யும் ஜனாதிபதித் தேர்தலை தமிழ் மக்கள் புறக்கணிக்க வேண்டுமென வலியுறுத்தி வடக்கு கிழக்கில் பிரச்சாரத்தை முன்னெடுத்து வருகின்றது.

ஜனாதிபதித் தேர்தலைப் புறக்கணிக்குமாறு கூறி மக்களுக்குத் தெரிவிப்பதை குற்றமாகக் கருதி அதனைத் தடுக்கப் பொலிஸார் செயற்படுகிறீர்களா என வினவிய தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர், பொலிஸார் தமிழ் மக்களுக்கு நீதியை வழங்குகின்றார்களா எனவும் மேலும் கேள்வி எழுப்பியுள்ளார்.

“ஆனால் ஒன்றைச் சொல்லுங்கள். இந்த நாட்டைத் திறமையாக அழித்து பாதாளத்தில் கொண்டுவந்து விட்டுள்ளீர்கள். இந்த நாட்டில் ஒரு அரசியல் அமைப்பு மாற்றத்தை கொண்டுவரப் போவது இல்லை. நீங்கள் அழித்து விட்டீர்களே. பொலிஸாரிடம் தமிழருக்கு நியாயம் இருக்கின்றதா?”

பொலிஸாரின் தலையீடு காரணமாக விழிப்புணர்வுப் பிரச்சாரத்தை நிறுத்துவதற்கு இணக்கம் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன், நாட்டின் அரசியல் அமைப்பில் மாற்றத்தைப் ஏற்படுத்த பொலிஸாரைத் தலையிடுமாறும் கேட்டுக்கொண்டார்.

“நாங்கள் இதனை நிறுத்துகிறோம். இந்த நாட்டில் ஒரு அரசியல் அமைப்பு மாற்றத்தை கொண்டுவருவதற்கு உங்கள் ஆட்சியாளர்களுக்கு சொல்லி மாற்றத்தை கொண்டுவாருங்கள்.”

அரசியலமைப்பின் பிரகாரம் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படும் என, இலங்கையின் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் சமன் ஸ்ரீ ரத்நாயக்க மே மாதம் அறிவித்திருந்த நிலையில், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் தேர்தல் புறக்கணிப்பு கோரிக்கையை எழுத்து மூலம் தமிழ் மக்கள் மத்தியில் விநியோகிக்க ஆரம்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



# தேசிய நல்லிணக்கத்துக்கான முன்னோடி வேலைத் திட்டம்!

### ஜனாதிபதி ரணிலிடம் கையளித்த முன்னாள் அமைச்சர் பஷீர் சேகு தாவூத்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

உற்பத்தி திறன் ஊக்குவிப்பு முன்னாள் அமைச்சரும், புத்திஜீவியுமான பஷீர் சேகுதாவுத் தேசிய நல்லிணக்கத்துக்கான முன்னோடி வேலை திட்டம் ஒன்றை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் மேலான நடவடிக்கைக்கு சமர்ப்பித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்துக்கு கடந்த வாரம் விஜயம் மேற்கொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் பாசிக்குடாவில் உள்ள விடுதி ஒன்றில் வைத்து பஷீர் சேகுதாவூத் நல்லெண்ண சந்திப்பை மேற்கொண்டிருந்தார்.

அப்போதே அனுராதபுரத்தை பிரதான தலைமை நகரமாக மையப்படுத்தி இலங்கையில் உள்ள உலர் வலய பிரதேசங்களுக்கு இடையிலான இணைப்பு பாலமாக கடலோர ரயில்வேத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பான நிபுணத்துவ ஆலோசனையை ஜனாதிபதியிடம் இவர் முன்வைத்துள்ளார்.

உலர் வலய பிரதேசங்களுக்கு இடையிலான இணைப்பு பாலமாக கடலோர ரயில்வேத் திட்டத்தை நடைமுறைப் படுத்துவதன் மூலம் சமூக – பொருளாதார மேம்பாடு, சுற்று சூழல் பாதுகாப்பு, இயற்கையோடு இணைந்த வாழ்வியல், சமூக நல்லிணக்கம் ஆகியவற்றை நிலை நாட்டவும், கட்டியெழுப்பவும் முடியும் என்று இவர் தெரிவித்துள்ளார்.

வரலாற்று முக்கியத்துவமும், கலாசார பாரம்பரிய பெருமையும், ஆன்மீக மகிமையும், சகவாழ்வின் மேன்மையும் நிறைந்த அனுராதபுரத்தை தலைமை நகரமாக கொண்டு இவ்வேலை திட்டம் முன்னெடுப்படுவதை நாட்டின் எல்லா இன மக்களும் நிரந்தர சமாதானம், நீடித்த அபிவிருத்தி ஆகிய வற்றுக்கான திறவுகோலாக பார்ப்பார்கள் என்று இவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

வனஜீவராசிகளின் இயற்கைச் சரணாலயமாக விளங்கும் உலர் வலயத்தை மையப்படுத்திய இந்த வேலைத் திட்டம் மூலம் சுற்றுலா துறையை மேம்படுத்த முடிவதுடன் மேல் மாகாணத்துக்கும், உலர் வலயத்துக்கு இடையில் நிலவி வருகின்ற பொருளாதார ஏற்ற தாழ்வுகளை களைய முடியும் என்பதும் இவருடைய வேலை திட்டத்தின் முக்கிய அம்சம் ஆகும்.

வடக்கு, கிழக்கு, மலையகம் ஆகிய வற்றுக்கு ஊவா மாகாணத்தில் பதுளையில் அமைந்துள்ள ஹப்புத்தளை நகரத்தில் இருந்து சுற்று சூழலுக்கு உகந்த வகையில் ரயில் பாதைகள் அமைக்கப்பட வேண்டும் என்கிற இவரின் வேலை திட்டம் உண்மையிலேயே தூர நோக்கு உடையது என்று ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# சஜித் வருகைக்கான ஏற்பாட்டுக் கூட்டம்

( வி.ரி.சகாதேவராஜா)


ஜனாதிபதி வேட்பாளரும் ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் தலைவருமான சஜித் பிரேமதாசாவை ஆதரித்து மட்டக்களப்பு மாவட்டத்தில் நடைபெறவுள்ள பொதுக் கூட்டம் தொடர்பான முன்னேற்பாடு கூட்டம் ஐக்கிய மக்கள் கட்சியின் மாவட்ட அமைப்பாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான எஸ்.கணேசமூர்த்தி தலைமையில் கல்லடியில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் சார்பில் முன்னாள் ஆளுநர் ஹிஸ்புல்லா, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் தலைவர் றிஷாட் பதியுதீன், முன்னாள் அமைச்சர் தவிசாளர்அமீரலி மற்றும் ஆதரவாளர்கள் கலந்து கொண்டனர்.




இணைந்த கட்சிகளின் உடன்படிக்கையில் மட்டக்களப்பு மாவட்ட உடன்படிக்கை தொடர்பாகவும் பேசப்பட்டது.







# ரணிலின் கரங்களை பலப்படுத்த உறுதிமொழி

(அஸ்ஹர் இப்றாஹிம்)

யூத் விஷன் 2048 இளைஞர் அமைப்பினர் ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவின் கரத்தை பலப்படுத்த உறுதி மொழி எடுத்துள்ளனர்.

யூத் விஷன் 2048 இளைஞர் அமைப்பு ஒழுங்கு செய்திருந்த இளைஞர்களின் ஒன்று கூடல் நிகழ்வு பத்தரமுல்ல வோட்டர் எஜ் உல்லாச விடுதியில் இடம்பெற்றது.

ஐக்கிய தேசிய கட்சியின் தேசிய அமைப்பாளர் சாகல ரத்நாயக பிரதம அதிதியாக கலந்து கொண்ட இந்த நிகழ்வில் பங்கேற்ற இளைஞர் யுவதிகள் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்ரமசிங்கவின் கரங்களை பலப்படுத்த உறுதி பூண்டனர்.




# முன்பள்ளிச் சிறார்களுக்கு உதவி



(த.சுபேசன்)

சுன்னாகம் பாரம்பரிய ரோட்டரிக் கழகத்தினரால் சாவகச்சேரி–தனங்கிளப்புப் பகுதியில் அமைந்துள்ள பண்டிதமணி முன்பள்ளிச் சிறார்களுக்கு இன்று (27) செவ்வாய்க்கிழமை காலை புத்தகப்பைகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இந்திய ரோட்டரிக் கழகங்களின் நிதி உதவியுடன் வழங்கப்பட்ட இந்த உதவித் திட்டம் வழங்கும் நிகழ்வில் சுன்னாகம் பாரம்பரிய ரோட்டரிக் கழக உறுப்பினர்கள், முன்பள்ளி ஆசிரியர் ஆகியோர் கலந்து கொண்டனர்.


EVEREST
FURNITURE
HIGH QUALITY PRODUCTS
(416) 332-0721
everestfurniture.ca
EverestFurnitureInc
80 FINCHDENE SQ M1X 1C1 SCARBOROUGH, CANADA



# சாவகச்சேரி சித்தி விநாயகர் மன்றத்தின் முத்தமிழ் விழா

(த.சுபேசன்)

சாவகச்சேரி பெரியமாவடிப் பகுதியில் அமைந்துள்ள சித்திவிநாயகர் கலை மன்றத்தின் முத்தமிழ் விழா நிகழ்வுகள் கடந்த சனிக்கிழமை கலை மன்ற முன்றலில் இடம்பெற்றிருந்தது.

நிலையத் தலைவர் மு.கதிரவேலு தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண கல்வித் திணைக்கள அழகியல் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் நா.இராஜனும், சிறப்பு அதிதியாக வர்த்தகர் சிவபாலனும் கௌரவ விருந்தினராக கோவிற்குடியிருப்பு கிராம அலுவலர் ஞானசேந்தனும் கலந்து கொண்டனர்.

இதன்போது கலை மன்றத்தின் வளர்ச்சிக்கு துணை நின்ற ஆரம்ப கால உறுப்பினர்களான சி.வீரசிங்கம், வே.இராசதுரை, ராஜேந்திரன், க.யேசுதாசன் ஆகியோர் கலை மன்றத்தினரால் கௌரவிக்கப்பட்டனர்.

நிகழ்வில் நடனம், நகைச்சுவை நாடகம், இன்னிசை நிகழ்வு, இயலுரை உள்ளிட்ட நிகழ்வுகளும் இடம்பெற்றன.





# காரைதீவில் சொற்பொழிவு நிகழ்த்திய தஞ்சாவூர் சுவாமி விமூர்த்தானந்தா!

(வி.ரி. சகாதேவராஜா)

இந்தியா தஞ்சாவூர் இராமகிருஷ்ண மிஷன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி விமூர்த்தானந்தா ஜீ மகராஜ் நேற்று காரைதீவுக்கு விஜயம் செய்தார்.

இவரது ஆளுமைவிருத்தி தொடர்பிலான ஆன்மீகச் சொற்பொழிவு நேற்று (26) திங்கட்கிழமை காலை காரைதீவு இராம கிருஷ்ண மிஷன் சாரதா நலன் புரி நிலையத்தில் நடைபெற்றது.

சுவாமிகளுடன் இலங்கை இராம கிருஷ்ண மிசன் மூத்த துறவி ஸ்ரீ மத் சுவாமி இராஜேஸ்வரானாந்த ஜீ மகராஜ் மட்டக்களப்பு இராம கிருஷ்ண மிசன் மேலாளர் ஶ்ரீ மத்சுவாமி, நீலமாதவானந்தா ஜீ சுவாமி, மாத்ருசேவானந்தர் ஜீ மகராஜ் ஆகியோரும் வருகை தந்தி ருந்தனர்.

முன்னதாக சுவாமிகள் காரைதீவு ஸ்ரீ கண்ணகி அம்மன் ஆலயத்தில் வழிபாடு செய்து பின்னர் முத்தமிழ்வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளார் பிறந்த வீட்டுக்கு விஜயம் செய்து சுவாமியின் திருவுருவச் சிலைக்கு மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். காரைதீவு ஸ்ரீ சாரதா நலன்புரி நிலையத்துக்கு விஜயம் செய்தனர்.

மட்டக்களப்பு ராமகிருஷ்ண மிஷன் கல்லடி ஆச்சிரம பொது முகாமையாளர் ஶ்ரீ மத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ் அறிமுக உரை நிகழ்த்தினர்.







## காரைதீவு - வெருகல் ஒன்பது நாள் பாதயாத்திரை ஆரம்பம்!

(வி.ரி. சகாதேவராஜா)

வரலாற்று பிரசித்தி பெற்ற காரைதீவு வெருகலம்பதி ஒன்பது நாள்கள் பாதயாத்திரை நேற்று திங்கட்கிழமை ஆரம்பமாகியது.

ஆரம்ப வைபவம் காரைதீவு மாவடி ஸ்ரீ கந்தசுவாமி ஆலயத்தில் நேற்று திங்கட்கிழமை அதிகாலை 4 மணியளவில் இடம்பெற்றது.

வரலாற்று பிரசித்தி பெற்ற வெருகலம்பதி ஸ்ரீ சித்திர வேலாயுதர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் 04 ஆம் தேதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

அதனை முன்னிட்டுப் பாதயாத்திரை ஒன்பது நாள்கள் பிரதான வீதியில் பயணித்து செப்ரெம்பர் 3 ஆம் திகதி வெருகலை சென்றடையும்.

ஆலய பிரதம குரு சிவஸ்ரீ சபா ஹோவர்த்தன சர்மா விசேட பூஜை நடத்தி பிரதான வேலைக் கையளித்தார்.

முருக பக்தர் தங்கராஜா சந்திரமூர்த்தி பிரதான வேலைத் தாங்கித் தலைமை வகிக்க அரோகரா கோஷம் முழங்க யாத்திரை ஆரம்பமாகியது.

மாவட்ட இந்து கலாசார உத்தியோகத்தர் கு.ஜெயராஜி பாதயாத்திரையின் முக்கியத்துவம் பற்றி உரை நிகழ்த்தினார்.

காரைதீவு பக்தர்களுடன் அக்கரைப்பற்று ஆலையடிவேம்பு பக்தர்களும் சுமார் 40 பேர் கலந்து கொண்டனர்.






# மட்டு.சுகாதார அலுவலகத்தின் ஏற்பாட்டில் வைத்திய முகாம்!

(பழுவூரான்)

மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தின் ஏற்பாட்டில் மண்முனை வடக்குப் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நேற்று திங்கட்கிழமை (26) வைத்திய முகாமொன்று இடம்பெற்றது.

மண்முனை வடக்குப் பிரதேச செயலாளர் வி. வாசுதேவனின் ஒழுங்குபடுத்தலில் தொற்றா நோய்களுக்கான வைத்திய பரிசோதனை சுகாதார வைத்திய அதிகாரி திருமதி பிரசாந்தி லதாகரன் தலைமையில் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது மண்முனை வடக்குப் பிரதேச செயலாளர் வி. வாசுதேவன் மற்றும் செயலக உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

இவ் வைத்திய முகாமில் நீரிழிவு, குருதி அழுத்தம், உடல் திணிவு சுட்டி, மார்பக புற்று நோய், கண் பரிசோதனை, கர்ப்பப்பை கழுத்து புற்று நோய், இதய நோய்ப் பரிசோதனை போன்றவற்றுக்கான பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்தப் பரிசோதனைகளை மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை வைத்திய அதிகாரிகளும்,தாதிய உத்தியோகத்தர்களும் இணைந்து மேற்கொண்டனர்.








# ரஜினியோடு ஒத்து ஊதிய உதயநிதி

## தி.மு.க.வுக்குள் — சலசலப்பு!

### மூத்த அரசியல்வாதிகளுக்கு ‘கிலி’

ரஜினி காந்தின் சர்ச்சைப் பேச்சு ஓய்வதற்குள், அவரது பேச்சை ஒத்ததாக “இளைஞர்கள் முன்வர மூத்தவர்கள் அவர்களுக்கு வழி விடவேண்டும்” என அமைச்சர் உதயநிதி ஸ்டாலினும் தெரிவித்துள்ளமை பெரும் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது.

சென்னை கலைவாணர் அரங்கத்தில் தி.மு.க. பொறியாளர் அணி நடத்திய கல்லூரி மாணவர்களுக்கான பேச்சுப்போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் காசோலைகளை வழங்கி வாழ்த்திப் பேசினார்.

அதன்போது அவர்,

“பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு எழுதிய ‘கலைஞர் எனும் தாய்’ என்ற புத்தகத்தை நமது முதலமைச்சர் வெளியிட்டார். இது ஒரு சிறப்பான நிகழ்ச்சி.

அதில், முதல் பிரதியைப் பெற்றுக் கொண்ட சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த், கிட்டத்தட்ட 45 நிமிடங்கள் எங்கள் தலைவரைப் பற்றியும், கலைஞரைப் பற்றியும் பாராட்டிப் பேசினார்.

அதன் தொடர்ச்சியாக பொறியாளர் அணி சார்பில் நிகழ்ச்சி நடக்கிறது. இதில், அண்ணன் பொன்முடி பேசும்போது குறிப்பிட்டுச் சொன்னார்.

இன்ஜினீயரிங் படிக்க முடியவில்லையே என அவருக்கு ஓர் ஏக்கம் உள்ளது என்றார். எனக்கெல்லாம் அந்த ஏக்கம் இருந்தது கிடையாது. நான் அதற்கான முயற்சி எடுக்கவே இல்லை.

நாங்கள் படிக்கும் போதெல்லாம் எம்.பி.பி.எஸ். பக்கமே தலை வைத்துப் படுக்கக்கூடாது என்று நினைப்போம். எம்.பி.பி.எஸ்., இன்ஜினீயரிங் பக்கமே போகமாட்டோம். நேராக பி.கொம் முடித்து விட்டு அப்படியே பிசினஸ் பார்க்கப் போய் விடுவோம்.

அதேமாதிரி அண்ணன் பொன்முடி பேசும்போது சொன்னார் தயாநிதி மாறனுக்கு மூத்தவர்களைக் கண்டால் பிடிக்கவே பிடிக்காது என்றார். அப்படியெல்லாம் கிடையாது. நான் ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், அண்ணன் தயாநிதி மாறனே எனக்கு மூத்தவர் தான். எனக்கு எல்லோருமே சமம் தான். இன்னும் சொல்லப் போனால் இங்கு இருப்பதிலேயே மிகவும் சின்னவன் நான்தான்.

கிட்டத்தட்ட 17 ஆயிரம் மாணவர்கள் கலைஞரின் உயிரினும் மேலான பேச்சுப் போட்டிக்கு விண்ணப்பித்து இருக்கிறார்கள்.

இளைஞர்கள் எங்கள் பக்கம் வருவதற்குத் தயாராக இருக்கிறார்கள். நாம் தான் அவர்களுக்கு வழிவிட்டு அரவணைத்து அவர்களை வழி நடத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொரு வேண்டுகோள் வழி விட்டு வழி நடத்திக் கைபிடித்துக் கூட்டிச் செல்ல வேண்டும்.

சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் நேற்று முன்தினம் பேசும்போது எதற்கு அதிகமான கைத்தட்டல்கள் என்பதை நீங்கள் கேள்விப் பட்டிருப்பீர்கள். நான் சொல்லக் கூடாது. நான் சொன்னால் ஏதோ மனதில் வைத்துக்கொண்டு சொல்கிறேன் என்று நினைத்துக்கொள்வீர்கள். தொலைக்காட்சிகளில் நீங்களே பார்த்திருப்பீர்கள்.

– இவ்வாறு அவர் பேசினார்.

உதயநிதி ஸ்டாலினின் இந்த பேச்சை இளைஞரணியினர் வரவேற்கும் நிலையில் மூத்தவர்களுக்கு இப்போது ‘கிலி’ ஏற்பட்டுள்ளது.

ஏற்கனவே நடிகர் ரஜினிகாந்தும் இதே கருத்தை வலியுறுத்தி துரைமுருகனைப்பார்த்துப்பேசியதால்சர்ச்சையில் சிக்கினார். இதற்கு அமைச்சர் துரைமுருகனும் காட்டமாகப் பதில் தெரிவித்திருந்தார். அதன் பிறகே இருவரும் நண்பர்களாக இருப்போம் என்று கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து மூத்த நிர்வாகி ஒருவர் கூறுகையில்,

“அண்ணா கட்சி ஆரம்பித்த காலத்தில் தி.மு.க. நிர்வாகிகள், எம்.எல்.ஏ.க்களாக இருந்தவர்களில் பெரும்பாலானோருக்கு 35 வயதுதான். ஆனால், இப்போது 50 வயதைத் தாண்டியவர்கள்தான் அதிகமாக உள்ளனர்.

வாக்காளர் பட்டியலில் கூட இப்போது 40 வயதுக்கு உட்பட்டவர்கள் எண்ணிக்கை அதிகமாகிவிட்டது. அதனால் தான் இளைஞரணியினருக்கு முக்கியத்துவம் கொடுக்கும் வகையில் உதயநிதி ஸ்டாலின் மட்டுமல்ல ரஜினிகாந்தும் அதை வலியுறுத்தி இருக்கிறார்.

எனவே, இந்தக் கருத்துக்களால் தி.மு.க.வில் மாற்றங்கள் தொடங்கி விட்டதாகவே நாங்கள் கருதுகிறோம். அதனால்தான் கட்சியில் மூத்தவர்களுக்கு இப்போது ‘கிலி’ ஏற்படுகிறது” என்றார்.

# கண் எதிரே திடீரென வந்த சரக்கு ரயில் தண்டவாளத்துள் குப்புறப் படுத்த பெண்

# ‘திக் திக்’ நிமிடங்கள்




தெலுங்கானா மாநிலத்தில் தண்டவாளத்தை கடக்க முயன்றபோது சரக்கு ரயில் வருவதைக் கண்ட பெண் துரிதமாக செயல்பட்டு தண்டவாளத்தில் படுத்து உயிர் பிழைத்த வீடியோ சமூக வலைதளத்தில் வைரலாகி உள்ளது.

தெலுங்கானா மாநிலம் விகர்பாத்தின் நவாந்த்கியில் ஒரு பெண் தண்டவாளத்தைக் கடக்க முயன்றபோது, திடீரென ரயில் ஒன்று வருவதைக் கவனித்தார். உடனே அந்தப் பெண் தண்டவாளத்தில் படுத்துக் கொண்டார்.

ரயில் தனக்கு மேலே சென்று கொண்டிருப்பதை உணர்ந்து பதற்றம் அடைந்தாலும், அந்தப் பெண் அசையாமல் படுத்துக் கொண்டார். ஒரு கட்டத்தில் அவள் தலையை தூக்க முயன்றாலும், அந்தச் சம்பவத்தை படமெடுக்கும் ஒருவர் அவளை தலையை கீழே வைக்கும்படி அறிவுறுத்தினார்.

பதற்றமான சில நொடிகளுக்குப் பிறகு, ரயில் கடந்து செல்கிறது. அவள் பாதுகாப்பாக தண்டவாளத்திலிருந்து எழுந்தாள். அவளது தோழியான மற்றொரு பெண், தண்டவாளத்தின் அருகே காத்திருப்பதை வீடியோவில் காண முடிகிறது.

இந்தச் சம்பவம் உள்ளூர்வாசிகளை அதிர்ச்சியிலும் ஆச்சரியத்திலும் ஆழ்த்தியுள்ளது. அந்தப் பெண்ணின் சிந்தனைத் திறன் மற்றும் அதிர்ஷ்டம் அவரது உயிரைக் காப்பாற்றியுள்ளது என அவர்கள் தெரிவித்தனர்.

# அரசியல் படிக்க லண்டன் போகிறார் அண்ணாமலை



அரசியல் படிப்புக்காக தமிழக ப.ஜ.க. தலைவர் அண்ணாமலை லண்டன் செல்லவுள்ளார்.

லண்டனில் உள்ள ஒக்ஸ்போர்டு பல்கலைக்கழகம் சர்வதேச அரசியல் படிப்புக்காக பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 40 பேரைத் தேர்வு செய்துள்ளது.

இதில் இந்தியாவிலிருந்து தேர்வுசெய்யப்பட்டுள்ள 12 பேரில் தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலையும் ஒருவர். அங்கு தங்கி படிப்பவர்களுக்கான செலவை பல்கலைக்கழகமே ஏற்றுக்கொண்டுள்ளது.

இதற்காக அண்ணாமலை நாளை இரவு சென்னையில் இருந்து லண்டன் புறப்பட்டு செல்கிறார்.

3 மாதங்கள் லண்டனில் தங்கிப் படிக்கும் அண்ணாமலை வரும் நவம்பர் மாத இறுதியில் படிப்பை முடித்து சென்னை திரும்புவார்.



## சூடானில் பெரும் வெள்ளத்தால் அணை உடைந்து

# பேரனர்த்தம்!

## 60 பேர் சாவு; நூற்றுக்கணக்கானோர் மாயம்

கிழக்கு சூடானில் கனமழை பெய்வதால் பெரும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு அணை உடைந்தமையால் அதில் சிக்கி 60 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் நூற்றுக்கணக்கானோர் மாயமாகியுள்ளனர் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதுதொடர்பாக செங்கடல் மாநில நீர் கழகத்தின் தலைவர் ஓமர் இசா தாஹிர் கூறுகையில்,

“அணை உடைந்தமையால் மாநிலத்தின் தலைநகரான போர்ட் சூடானுக்கு அருகிலுள்ள கிராமங்கள் பேரழிவிற்குள்ளாகியுள்ளன. வெள்ளத்தில் சிக்கியவர்களை வெளியேற்றுவதையே முன்னுரிமையாகக் கொண்டு மீட்புக் குழுக்கள் செயல்பட்டு வருகின்றன.

அணைப் பகுதி மற்றும் அதைச் சுற்றியுள்ள கிராமங்களில் உடனடியாக் மீட்புப்பணிகள் தேவைப்படுகின்றன. தண்ணீரிலிருந்து தப்பிக்க முற்படுவோர் தேள் மற்றும் பாம்புக் கடிக்குள் சிக்கும் அபாயம் காணப்படுகிறது.” என்றார்.

இதனிடையே கனமழை காரணமாக அணை இடிந்து விழுந்தமையால், வண்டல் மண்ணுடன் சேர்ந்த கடுமையான வெள்ளம், அருகிலுள்ள கிராமங்களை அழித்தது. இதனால் மீட்பு முயற்சிகள் கடினமாகியுள்ளன என உள்ளூர் ஊடகங்கள் தெரிவித்தன.

போர்ட் சூடானுக்கு வடக்கே சுமார் 20 கிலோமீற்றர் தொலைவில் அமைந்துள்ள இந்த அணை, 25 மில்லியன் கன மீற்றர் கொள்ளளவு கொண்ட நீர்த் தேக்கத்தைக்கொண்டிருந்தது. மேலும் நகரத்தின் முக்கிய நீர் ஆதாரமாக இது இருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## துப்பாக்கியால் சுட்டு தாய்-தந்தை

# கொடூரக்கொலை

## தப்ப முயன்ற மகன் பொலிஸாரிடம் சூடு வாங்கி பாட்டுப் பாடிய சம்பவம்




அமெரிக்காவின் கலிபோர்ணியாவைச் சேர்ந்தவர் ஜோசப் பிராண்டன் கெர்ட்வில் (41). இவர் தனது பெற்றோர் ரொனால்ட் கெர்ட்வில் (77) மற்றும் அன்டோனெட் கெர்ட்வில் (79) ஆகியோரைக் கொடூரமாக கொலை செய்து தலையைத் துண்டித்துள்ளார்.

இதைத்தொடர்ந்து பெற்றோர் வளர்த்து வந்த நாயையும் அவர் கொலை செய்துள்ளார். வீட்டில் பராமரிப்பு ஊழியராகப் பணிபுரிந்து வந்தவரையும் தாக்கியுள்ளார்.

அத்துடன், கொலை செய்யப்பட்டமை தொடர்பான கிராபிக்ஸ் புகைப்படத்தையும் உறவினருக்கு அனுப்பியுள்ளார். அவர் இது தொடர்பாக பொலிஸாருக்குத் தகவல் தெரிவிக்க, பொலிஸார் சம்பவ இடத்திற்கு விரைந்தனர்.

அதற்குள் வீட்டில் இருந்து ஜோசப் பிராண்டன் கெர்ட்வில் தப்பி ஓட முயன்றார். அப்போது பொலிஸார் அவரை வீதியில் வைத்துச் சுற்றி வளைத்தனர்.

அப்போது ஆயுதங்களைக் கீழே போட்டுவிட்டு சரணடையுமாறு பொலிஸார் கேட்டனர்.

இதன்போது ஜோசப் பிராண்டன் கெர்ட்வில்,

“நான் உங்களை விரும்புகிறேன். மன்னித்துக் கொள்ளுங்கள். நீங்கள் சாகப் போகிறீர்கள்” என்றார்.

மேலும், “என்னைச் சுட்டு வீழ்த்தி விடுங்கள்” எனவும் கெஞ்சினார். தொடர்ந்து சரணடைய மறுப்புத் தெரிவித்தமையால் பொலிஸார் அவரைச் சுட்டனர்.

காயமடைந்த நிலையில் சுருண்டு விழுந்த அவரை பொலிஸார் கைவிலங்கு போட்டு கைது செய்தனர். காயத்திற்கு சிகிச்சை அளித்தபோது பதற்றமின்றிப் பாட்டு பாடினார்.

இந்த வீடியோ தற்போது வைரலாகி வருகின்றது.

பக்கங்கள் - 6

# கனடா முரசு

செவ்வாய்க்கிழமை 27/08/2024

## வோன் மில்ஸ் அருகில் கடத்தப்பட்ட பெண்

ஒன்றாரியோ, ஓகஸ்ட் 27

கடந்த வாரம் வோன் மில்ஸ் அருகில் இடம்பெற்ற கடத்தல் முயற்சி தொடர்பில் பல காணொலி ஆதாரங்கள் கிடைத்துள்ளன எனப் பொலி C2▶



# போராட்டத்தை கைவிட்டார்கள் ரயில் ஊழியர்கள்

**ஒன்றாரியோ, ஓகஸ்ட் 27**

**கனடாவில் முன்னெடுக்கப்பட்டு வந்த ரயில் பணியாளர்களின் தொழிற்சங்க போராட்டம் கைவிடப்பட்டுள்ளது.**

**சரக்கு ரயில்களில் பணியாற்றும் பணியாளர்களே இந்த போராட்டத்தில் குதித் திருந்தனர்.**

**இந்தப் போராட்டத்தில் கனடாவின் பிரதான இரண்டு ரயில் சேவை பணி யாளர்களும் இணைந்து கொண்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.**

இந்த தொழிற்சங்க போராட்டம் சில நாள்களே முன்னெடுக்கப்பட்டா லும் இதன் பாதிப்பு அதிகமானது எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

குறிப்பாக சரக்கு விநியோகத்தில் இந்தத் தொழிற்சங்க போராட்டம் பெரும் பாதிப்பை ஏற்படுத்தக் கூடும் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஒரு நாள் போராட்டம் முன்னெடுக்கப் பட்டாலும் பல மில்லியன் டொலர்களை இழக்க நேரிடும் என உற்பத்தி யாளர் கள், வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர்.



# வெளிநாட்டு பணியாளர்களைத் தவிர்த்து கனடியர்களை வேலைக்குச் சேருங்கள்

## வணிகங்களிடம் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ வலியுறுத்து

ஒன்றாரியோ, ஓகஸ்ட் 27

பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ கனேடியர் களை வேலைக்கு அமர்த்துமாறு வணி கங்களை வலியுறுத்தியுள்ளார்.


நாட்டில் குறைந்த ஊதியத்திற்கு தற்காலிக வெளிநாட்டு ஊழியர்களின் எண்ணிக்கையை அமர்த்துவதனை கட்டுப் படுத்துவதற்கு கனேடிய அரசாங்கம் புதிய விதிமுறைகளை அறிவித்துள்ளது.

லிபரல் கட்சியின் குடியேற்றக் கொள் கையில் ஒரு முக்கிய மாற்றமான நிரந் தர வதிவிடத்திற்கான வருடாந்த இலக் குகளைக் குறைக்கலாமா என்பது தொடர்பில் ஒட்டாவா பரிசீலித்து வரு கிறது.

தற்காலிக வெளிநாட்டுத் தொழிலாளர் களின் சமீபத்திய வருகையைப் பற்றிய பெருகிய விமர்சனங்களுக்கு பதிலளிக் கும் விதமாக, மத்திய அரசாங்கம் தொற்றுநோய்க்கு முந்தைய விதிகளை மீண்டும் கொண்டு வருகிறது.

இது வணிகங்களுக்கு வெளிநாட்டி லிருந்து குறைந்த ஊதியத்தில் பணிய மர்த்துவதை கடினமாக்குகின்றது.






# விபத்தில் ஒருவரை மோதிக் கொன்றவர் தப்பி ஒரு வருடத்தின் பின்னர் சிக்கினார்

ஒன்றாரியோ, ஓகஸ்ட் 27

ஒரு வருடத்திற்கு முன்னர் மிசிசாகா பகுதியில் 401 நெடுஞ்சாலையில் வாகனத்தால் மோதி உயிரிழந்த சமப்வம் தொடர்பில் வாகனத்தின் சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளார்.

2023ஆம் ஆண்டு ஏப்ரல் 22ஆம் திகதி மவிஸ் வீதியில் நெடுஞ்சாலை 401இல் மேற்குப் பகுதியில் இந்த சம்பவம் இடம் பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்தில் மிசிசாகாவைச் சேர்ந்த 29 வயதான நபர் ஒருவர் உயிரிழந்தார். சம்பவ இடத்திலிருந்து 34 வயதான ஷஹர்யார் காலிம் கில் என்ற வாகன சாரதி தப்பிச் சென்றார் எனவும், ஓகஸ்ட் மாதம் 14ஆம் திகதி அவர் கைது செய்யப்பட்டார் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



## வோன் மில்ஸ்...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஸார் தெரிவித்துள்ளனர்.

ஓகஸ்ட் 23 அன்று ஷொப்பிங் சென்டரின் வடக்கு வாகன நிறுத்துமிடத்தில், ரதர்ஃபோர்ட் சாலை மற்றும் நெடுஞ்சாலை 400க்கு அருகில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

ஒரு பெண் கடத்தப்பட்டார் எனப் பல புகார்கள் வந்தமையைத் தொடர்ந்து நண்பகல் வேளையில் அந்த பகுதிக்கு தாங்கள் அழைக்கப் பட்டனர் என யோர்க் பிராந்தியப் பொலிஸார் தெரிவித்தனர்.

துப்பாக்கியுடன் ஆயுதம் ஏந்தியவர்கள் ர்ன நம்பப்படும் நான்கு சந்தேக நபர்கள் பெண் ஒருவரை அணுகி,

அவரை வாகனத்தின் பின்பகுதியில் வலுக்கட்டாயமாக ஏற்றிச் சென்றனர் எனப் பொலிஸார் கூறுகின்றனர்.

வாகனத்தின் சாரதி சிறிது தூரம் பயணித்ததன் பின்பு பாதிக்கப்பட்ட நபர் சிறிது நேரத்தின் பின்னர் தப்பிச் செல்ல முடிந்ததாக அவர்கள் தெரிவித்தனர். இதன்போது அந்தப் பெண்ணுக்கு காயங்கள் ஏற்பட்டுள்ளன என்றும் கூறப்பட்டது.

# 2 பெண்களின் கொலையுடன் தொடர்புடைய சந்தேக நபர் பற்றிய விவரங்கள் வெளியாகின




ஒன்றாரியோ, ஒகஸ்ட் 27

இரண்டு பெண்களின் கொலைகளுடன் தொடர்புடைய சந்தேக நபர் பற்றிய புதிய தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

ஹெமில்டன் பொலிஸார் இந்தப் புதிய தகவலை வெளியிட்டுள்ளனர்.

தனது உறவினர்களான இரண்டு பெண்களை 33 வயதான ஜோசப் ஆயிலா என்ற நபர் படுகொலை செய்துள்ளார் எனக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்த நபர் தொடர்பான புதிய படம் ஒன்றைப் பொலிஸார் வெளியிட்டுள்ளனர்.

இரண்டு பெண்களின் கொலையுடன் தொடர்புடைய இந்தச் நபரைத் தாங்கள் தேடி வருகின்றனர் எனப் பொலிஸார் தெரிவித் துள்ளனர்.

இட்டாபிகாக் பகுதியில் வீடு ஒன்றில் இரண்டு பெண்கள் சடலமாக மீட்கப்பட்டிருந்தனர். 82 மற்றும் 60 வயதான இரண்டு பெண்களே சம்பவத்தில் கொல்லப்பட்டிருந்தனர்.

நகரில் இந்த ஆண்டில் இதுவரை 54 படுகொலை சம்பவங்கள் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சந்தேக நபர் தொடர்பான தகவல்கள் ஏதேனும் இருந்தால் 911 என்ற பொலிஸ் அவசர இலக்கத்திற்கு அல்லது வேறும் வழிகளில் பொலிஸாருக்கு அறிவிக்குமாறு கோரப்பட்டுள்ளது.




# மெக்கில் பல்கலையின் சட்டப் பேராசிரியர்கள் தொழிற்சங்க அடிப்படையில் வேலைநிறுத்தம்

கியூபெக், ஒகஸ்ட் 27

மெக்கில் பல்கலைக்கழக சட்டப் பேராசிரியர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு தொழிற்சங்கம் வேலை நிறுத்தத்தை அறிவித்துள்ளது.

பல்கலைக்கழகத்தின் நிர்வாகத்துடன் பேச்சுவார்த்தை நடத்த மறுத்தன் காரணமாக, இலையுதிர் செமஸ்டருக்கான வகுப்புகளின் முதல் வாரமான திங்கள்கிழமை, அதன் உறுப்பினர்கள் வேலையை விட்டு வெளியேறினர்.

மெக்கில் சட்டப் பேராசிரியர்களின் சங்கம் அதன் முதல் கூட்டு ஒப்பந்தத்தைப் பெற விரும்புகிறது மற்றும் பல்கலைக்கழகம் இருப்பதற்கான உரிமையை சவால் செய்வதைத் தடுக்கிறது என சட்டப்பேராசிரியர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

வகுப்புகளுக்கு இடையூறு ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காக இந்த ஆண்டின் தொடக்கத்தில் தரப்படுத்தல் காலத்தில் தொழிற்சங்கம் ஒரு தற்காலிக வேலைநிறுத்தத்தைத் தொடங்கியது,

'அதனால்தான் செமஸ்டர் தொடங்குவதைத் தடுப்பதைத் தவிர வேறு வழியில்லை என்று நாங்கள் முடிவு செய்துள்ளோம்' என்று அவர் கூறினார்.





# ஒட்டாவாவில் பெண்மணி கணவரினால் படுகொலை

கனடாவின் ஒட்டாவாவில் 47 வயதான பெண் ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் அவரின் கணவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

ஒட்டாவாவின் மேற்கு பகுதியில் அமைந்துள்ள லேடி ஸ்லிப்பர் வேய் பகுதியில் இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

Jennifer Zabarylo என்ற பெண்ணே வீட்டில் சடலமாக மீட்கப்பட்டார் என ஒட்டாவா பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் ஒட்டாவா பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

மிக மோசமான காயங்களுடன் சம்பவ இடத்திலேயே அவர் உயிரிழந்துள்ளார். அவரின் கணவர் மீது இரண்டாம் நிலைக் கொலைக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

அவர்கள் வசித்த வீடு கணவன் - மனைவி இருவரின் கூட்டுப் பதிவில் உள்ள சொத்து எனவும் தெரிவிக்கப்பட்டது.



# துப்பாக்கி சகிதம் தாக்குதலுக்கு தயாராகக் காத்திருந்தவர் கைது

கனடாவில் ஹமில்டன் பகுதியில் இடம்பெறவிருந்த தாக்குதல் சம்பவம் ஒன்றை பொலிஸார் தடுத்து நிறுத்தியுள்ளனர்.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டின் பேரில் பொலிஸார் 23 வயதான நபர் ஒருவரைக் கைது செய்துள்ளனர்.

அந்த நபரிடமிருந்து பொலிஸார் கைத் துப்பாக்கி ஒன்றையும் மீட்டுள்ளனர்.

விழா ஒன்றில் பலர் குடியிருந்த போது தாக்குதல் நடத்தும் நோக்கில் இந்நபர் ஆயுதம் வைத்திருந்தார் எனச் சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

சிறுவர்கள் உள்ளிட்ட மக்கள் குழுமியிருந்த இடத்தில் இந்த நபரிடம் இருந்து துப்பாக்கி மீட்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

பொலிஸாரின் இந்த நடவடிக்கை மூலம் பாரிய துயர சம்பவம் ஒன்று தடுக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அருகாமையில் இருந்த நபர்கள் பொலிஸாருக்கு சந்தேகத்திற்கு இடமான இந்நபர் குறித்துத் தகவல் வழங்கியுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து பொலிஸார் குறித்த சந்தேக நபரை சோதனையிட்டு கைது செய்துள்ளனர்.

சூடு நடத்துவதற்கு ஆயத்த நிலையில் அந்தத் துப்பாக்கி வைக்கப்பட்டிருந்தது எனப்பொலிஸார் தெரிவிக்கின்றனர். சட்டவிரோதமாக ஆயுதத்தை வைத்திருந்தமை உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் அந்த நபருக்கு எதிராக வழக்கு தொடரப் படும் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.



# தென் ஒன்றாரியோவில் வெப்பநிலை உயருமாம்

கனடாவில் தென் ஒன்றாரியோ பகுதியில் வெப்பநிலை தொடர்பில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வின்ட்ஸோர், செதம் கென்ட், லெப்டன் ,லண்டன் மற்றும் மிடில் செக்ஸ் போன்ற பகுதிகளில் வெப்ப நிலை அதிக அளவில் காணப்படும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சுமார் 31 பாகை செல்சியஸ் அளவில் வெப்பநிலையை நீடிக்கும் எனவும் ஈரப்பதனின் அளவு 30 முதல் 40 பாகை செல்சியஸ் அளவில் காணப்படும் எனவும் தெரிவிக்கப் படுகிறது.

எதிர்வரும் நாள்களில் வெப்ப நிலை கூடிக்குறையும் காலநிலை நிலவும் என எதிர்வுகூறப்பட்டுள்ளது.






# இளம் தாயையும் மகளையும் அல்பர்ட்டாவில் காணோம்!

கனடாவின் அல்பர்ட்டா மாகாணத்தின் தென் கல்கரி பகுதியில் 24 வயதான இளம் தாய் ஒருவரும் அவரது மூன்று வயது மகளும் கடந்த 22 ஆம் திகதி முதல் காணாமல் போய் உள்ளனர்.

24 வயதான டெசிரி டி அவிலா மற்றும் மூன்று வயதான சாஸ்டி டி அவிலா ஆகிய இருவருமே இவ்வாறு காணாமல் போயுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தென் கல்கரியின் நான்டோன் நகரில் இந்த இருவரும் காணாமல் போய் உள்ளனர்.

பிரிட்டிஷ் கொலம்பியாவின் காஸ்ட்கார் பகுதிக்கு இந்த இருவரும் பயணித்த போது காணாமல் போயிருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

கியா ரியோ ரக வாகனம் ஒன்றில் இருவரும் பயணித்து உள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பெண் 5 அடி 4 அங்குல உயரத்தை கொண்டவர் எனவும் 53 கிலோகிராம் எடையு உடையவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.



# குற்றவாளியான றொரன்டோ பொலிஸ் அதிகாரி நாட்டை விட்டுத் தப்பி ஓட முயன்ற போது கைது

ஒன்றாரியோ, ஓகஸ்ட் 27

இறந்த நபர்களிடமிருந்து கடனட்டைகள் மற்றும் சொகுசு கைக்கடிகாரத்தைத் திருடியதற்காக குற்றவாளியாகக் காணப்பட்ட றொரன்டோ பொலிஸ் அதிகாரி, இப்போது அவர் பிணை விதிமுறைகளை மீறியமைக்காக மேலதிக குற்றச்சாட்டுகளை எதிர்கொள்கிறார்.

2020 மற்றும் 2022 க்கு இடையில் நடந்த ஐந்து சம்பவங்கள் தொடர்பான 15 குற்றச்சாட்டுகளில் தற்போது தண்டனைக்காக காத்திருக்கும் போரிஸ் போரிசோவ், சனிக்கிழமையன்று மொன்ரியல் ட்ரூடோ சர்வதேச விமான நிலையத்தில் நாட்டை விட்டு வெளியேற முயன்றபோது கைது செய்யப்பட்டுள்ளார்.

பிணையில் விடுவிக்கப்பட்ட அவர் நேற்றைய தினம் நீதிமன்றத்தில் ஆஜராகத் தவறியுள்ளார்.

இதனால், அவர் பிணை விதிகளை மீறிய குற்றச்சாட்டும் அவர் மீது சுமத்தப்பட்டுள்ளது.



# சீன மின்சார வாகனங்களுக்கு நூறு வீத வரி விதிக்கும் கனடா

சீனாவில் தயாரிக்கப்படும் மின்சார வாகனங்களின் இறக்குமதிக்கு வீத வரி விதிக்க தீர்மானித்துள்ளதாக கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்தார்.

அதன்படி ஒட்டாவா சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் எஃகு மற்றும் அலுமினியத்திற்கு 25 வீதம் கூடுதல் கட்டணத்தை விதிக் கும் என்றும் ட்ரூடோ தெரிவித் துள்ளார்.

அதெவேளை உலக சந்தையில் லாபம் பெரும் நோக்கில், சீனா நியாயமற்ற முறையில் நடந்துகொள்வதாகவும் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ விசனம் வெளியிட்டார்.